Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ௵ மே ௴ 9௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 8.

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும், ஆகாய விமானப் போர்.

சென்றவாரம், ஜெர்மனியின் வடமேற்கு பாகங்களில் பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை வெடிகுண்டுகளைப் போட்டது. ஹாம்பர்க் என்ற பட்டணம் பலமாகத் தாக்கப்பட்டது. தொழிற்சாலைப் பிரதேசங்களில் பெரும் நெருப்புப் பிடித்துக்கொண்டது. எம்டன் பட்டணமும், ராட்டர்டாம் பட்டணத்திலுள்ள எண்ணெய்க் களஞ்சியங்களும், வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

ஹாலந்து தேசக் கடலோரத்தில், 5,000 டன் எடையுள்ள விரோதிகளின் 'சப்ளை' கப்பல்கள் விமானப் படையால் தாக்கப்பட்டன. ஒரு கப்பல் தீப்பிடித்து எரிந்துவிட்டது. மற்றொரு கப்பல் கடலில் முழுகடிக்கப்பட்டது.

பிரெஸ்ட் என்ற துறைமுகத்தில் இருக்கும் ஜெர்மன் யுத்தக் கப்பல்கள், "நீசனோ", "ஷார்ன் ஹார்ஸ்ட்", பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. பிரெஸ்டிலுள்ள கப்பற்சாலைகளில் பல இடங்களில் நெருப்புப் பிடித்துக்கொண்டது.

சேபோர்க், பலோன் ஆகிய இடங்களிலுள்ள கப்பற் சாலைகள், லூதூகே என்ற இடத்திலுள்ள ஆகாய விமானச்சாலை, ஈசன், தூசல், தார்ப் என்ற இடங்கள், தெற்கு நார்வேயில் உள்ள எண்ணெய்க் களஞ்சியங்கள், ஆகாய விமானச்சாலை, இவையெல்லாம் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன.

கலோன் என்ற தொழிற்சாலைப் பிரதேசத்தில் அநேக டன் எடையுள்ள வெடிகுண்டுகள் பிரிட்டிஷ் விமானங்களால் போடப்பட்டன.

மத்தியதரைக் கடலில் பகைவர்களுடைய வர்த்தகக் கப்பல்கள், தாக்கப்பட்டன. மூன்று வர்த்தகக் கப்பல்கள்மேல் வெடிகுண்டுகள் நேர்முகமாக விழுந்தன, அந்தக் கப்பல்கள் முறையே 12,000, 8,000, 4,000 டன்கள் எடையுள்ளவை.

ஹாலந்திலுள்ள டென்ஹெல்டர் என்ற சப்மரீன் தளத்தை, பிரிட்டிஷ் விமானங்கள் பகலில் தாக்கின. ஹாலந்தின் கரையோரத்தைத் தாக்கியதும் எதிரிக்கு நஷ்டங்களை விளைவித்தது. மின்சாரக் கட்டடம், துருப்புகள் தங்கும் பாசறைகள், இதர கட்டடங்கள் ஆகியவற்றின்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. டென்ஹெல்டர், டெக்சல் தீவு, இவைகளில் உள்ள ஜெர்மன் துருப்புகள்மீது யந்திர பீரங்கிகள் பிரயோகிக்கப்பட்டன. பிளார்டிங்கன் என்ற இடத்திலுள்ள எண்ணெய்க் களஞ்சியங்களையும், ஹாலந்து கடற்கரையோரத்திலுள்ள விரோதிக் கப்பல்களையும், பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. ஐயாயிரம் டன் உள்ள ஒரு எண்ணெய்க் களஞ்சியம் சேதமாகிவிட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.

நல்ல நிலா வெளிச்சத்தில், விரோதிக் கப்பல்கள் நார்வேயிலிருந்து பிரிட்டன் கரையோரம் வரைக்கும், பிரிட்டிஷ் விமானங்களால் துரத்தியடிக்கப்பட்டன. ஸ்கேஜீராக் என்ற இடத்தில் 3,000 டன் எடையுள்ள ஒரு ஜெர்மன் 'சப்ளை' கப்பல் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. தெற்கு நார்வேயில், ஈகர் சந் என்ற இடத்தில், கப்பற்சாலைகள் தாக்கப்பட்டன.

ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள பிரான்சு தேசத்திலுள்ள கொர்குவில் ஆகாய விமானச்சாலை தாக்கப்பட்டது. துருப்புகளின் பாசறைகள்மேல் வெடிகுண்டுகள் விழுந்தன.

சென்ற வாரம், ஜெர்மன் விமானங்கள் பிரிட்டன்மேல் சில இடங்களில் வெடிகுண்டுகள் போட்டன. மர்சிசைட் பிரதேசத்தில் போட்ட வெடிகுண்டுகளால் உண்டாக்கப்பட்ட நெருப்புகள் சீக்கிரத்தில் அணைத்துவிடப்பட்டன. மூன்று ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

லிவர்பூலின்மேல் ஜெர்மன் விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டன. லிவர்பூல் நான்கு நாள், இரவும் பகலும், தாக்கப்பட்டது. லிவர்பூல் மக்கள் பீதியடையாமல் தைரியத்துடன் இருந்தார்கள். ஆயிரக் கணக்கான அக்கினிக் குண்டுகள் லிவர்பூலின் மேல் போடப்பட்டன. அவைகளால் ஏற்பட்ட நெருப்பு சீக்கிரத்தில் அணைக்கப்பட்டது.

பிரிட்டனின் தெற்கு, வடகிழக்கு, கரையோரப் பட்டணங்கள்மேல் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டு பலத்த சேதத்தை உண்டாக்கின.

சென்ற சனிக்கிழமை இரவு, 16 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஒரு இரவில் இவ்வளவு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது இதுதான் முதல் தடவை. இதற்குமுன் ஓரிரவில் சுட்டு வீழ்த்தப்பட்ட அதிகப்படியான ஜெர்மன் விமானங்கள் 13.

மே மாதம் முதல் மூன்று நாட்களில், மொத்தம் 21 ஜெர்மன் விமானங்கள் வீழ்த்தப்பட்டன. சென்ற வெள்ளிக் கிழமை இரவு, பிரான்சின்மேல் பறந்துகொண்டிருந்த ஒரு ஜெர்மன் விமானம் பிரிட்டிஷாரால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பிரிட்டனில் நடந்த ஆகாய விமானப் போரில், ஏப்ரல் மாதம் வீழ்த்தப்பட்ட ஜெர்மன் விமானங்கள் மொத்தம் 163. இவைகளில் 84, 'பைடர்' என்ற பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் வீழ்த்தப்பட்டன.

யுத்தம் ஆரம்பித்த நாள் முதல் இதுவரையில், பகலிலும் இரவிலும், பிரிட்டனைத் தாக்கியதில், ஜெர்மனி இழந்த ஆகாய விமானங்களின் எண்ணிக்கை 3,327.

பிரிட்டிஷ் விமானங்கள், ஹாம்பர்க், லூஹேவர், பிரீசியன் தீவுகள், முதலிய எதிரிகளின் இடங்களை வெடிகுண்டுகளால் தாக்கின.

ஜெர்மன் விமானங்கள், பிரிட்டனில் கிளைட்சைட், மர்சிசைட் பிரதேசத்தில் வெடிகுண்டுகளைப் போட்டன.

### 2. ஆப்ரிக்காவும், மத்தியதரைக்கடலும்.

தோப்ரூக்கில் சண்டை நடந்து கொண்டேயிருக்கிறது. ஜெர்மானியர்கள் தோப்ரூக்கை இரவில் தாக்கினார்கள். தென்மேற்கு எல்லைக்குள் சில 'டாங்க்'கிகள் பிரவேசித்தன. பகைவர்கள் வெளிப் பாதுகாப்பிற்கும், உட்பாதுகாப்பிற்கும், இடையில் உள்ள பிரதேசத்தில் நின்று போர் புரிகின்றார்கள்.

சோலும் பிரதேசத்தை பிரிட்டிஷார் கவனமாகப் பாதுகாத்து வருகின்றனர். பகைவர்கள் இங்கே முன்னேற்றமடைய முடியவில்லை.

பிரிட்டிஷ் ராணுவத் தலைமை ஸ்தானத்திலிருந்து வெளி வந்த அறிக்கை கூறுவதாவது :—தோப்ரூக்கைப் பகைவர்கள் தாக்கினார்கள். ஒரு பகுதியில் சேதத்துடன் அவர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள்,

16 'டாங்க்'கிகளும், அநேக துருப்புகளும் அவர்களுக்குச் சேதம். அபிசீனியாவில் ரேட்டுகள் செப்பனிடப்பட்டதால், நம்முடைய துருப்புகள் அம்ப அலாகி என்ற இடத்திலிருக்கும் பகைவர்களை நெருக்கின. பஹர்பார், டேபப் என்ற இடங்களைக் கைப்பற்றிக்கொண்டன. தெற்குப் பிரதேசங்களில் பிரிட்டிஷ் துருப்புகளின் செய்கைகள் வெற்றிகரமாக இருக்கின்றன.

மத்தியதரைக் கடலிலுள்ள மால்டா என்ற தீவு, சென்ற வாரம், ஜெர்மானியர்களால் பலமாகத் தாக்கப்பட்டது. பகைவர்களின் விமானங்கள் இரண்டு அலைகளைப் போல ஒன்றன் பின்னொன்றாக வந்து தாக்கின. முதல் அலை விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன, விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் அவைகள் விரட்டியடிக்கப்பட்டன. இரண்டாவது அலை விமானங்கள் அக்கினிக் குண்டுகளைப் போட்டன. ஒரு மாதாகோவில், ஒரு ஓட்டல், ஒரு சினிமா முதலியவைகள் சேதமடைந்தன. ஆனால் ராணுவ சம்பந்தமான இடங்களில் உயிர்ச்சேதமொன்றும் இல்லை.

தோப்ருக் பிரதேசத்தில் அக்ரோமாவுக் கருகில், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, பகைவர்களின் தளவாடங்கள் போய்க்கொண்டிருக்கும்போது, அவைகளின்மேல் வெடிகுண்டுகளைப் போட்டு, யந்திர பீரங்கிகளால் சுட்டுப் போர் தொடுத்தது. பகைவர்களின் ஆகாய விமானங்களில் மூன்று வீழ்த்தப்பட்டன.

பென்காசியையும், அம்ப அலாகியையும், பிரிட்டிஷ் துருப்புகள் தாக்கின.

சக்கரவர்த்தி ஹெயிலி செலாசி, ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அட்டிஸ் அபாபாவில் வெற்றியுடன் பிரவேசித்தார். பிரிட்டிஷ் தளகர்த்தர் கன்னிங்காம் அவரை வரவேற்றார்.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

சென்ற வாரம், பிரிட்டிஷ் ஸ்தானீகராகிய லார்டு ஹாலிபாக்ஸ், அமெரிக்க உதவி மந்திரியாகிய மிஸ்டர் சம்னர் வெல்சிடம், பொதுவாக யுத்த நிலைமையைப் பற்றியும் அமெரிக்காவின் உதவியைப் பற்றியும் பேசினார்.

ஆஸ்திரேலியாவின் முதன் மந்திரியாகிய மிஸ்டர் மென்சிஸ், அமெரிக்காவின் பெருவாரியான யுத்த உதவியைக் கோருவதற்காக, தான் அமெரிக்காவுக்குப் போவதாக லண்டனில் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள உபயோகப்படக்கூடிய எல்லா யந்திரங்களையும், ஆயுதங்களையும் சேகரிக்கவேண்டுமென்று, பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் உத்தரவிட்டிருக்கிறார். மிஸ்டர் நட்சன் என்பவருக்கு அவர் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார் :—"இப்போது நம்முடைய தேசத்திற்கு வந்திருக்கும் அபாயகரமான நிலைமைக்காக, வெடிகுண்டு மருந்துகள், விமானங்கள், கப்பல்கள் மிகவும் அதிகமாகத் தேவையாயிருக்கின்றன. ஆகையால், அமெரிக்காவில் ஒரு யந்திரமாவது சும்மாயிருக்கக்கூடாதென்பதைக் கவனிப்பதே நம்முடைய வேலை. இந்த யந்திரங்கள் ஒரு நாளில் 24-மணி நேரமும், ஒரு வாரத்தில் ஏழு நாட்களும் விடாமல் ஓய்வின்றி வேலைசெய்யவேண்டும். இது தான் நம்முடைய நோக்கம்."

அமெரிக்காவின் யுத்த மந்திரியான மிஸ்டர் ஸ்டிம்சன், பிரிட்டனுக்குப் பேருதவி செய்யவேண்டும் என்ற ரேடியோ பேச்சு மிகவும் முக்கியமானது. பிரிட்டனுக்கு யுத்த சாமான்கள் தடையில்லாமல் சென்று அங்கு சேருவதற்கு அமெரிக்கக் கப்பற்படை பூரண உதவியை அளிக்கவேண்டுமென்று அவர் கூறியிருக்கிறார். அமெரிக்கா சீக்கிரத்தில் யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்று அமெரிக்கப் பொது மக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில், மிஸ்டர் ஸ்டிம்சனின் பேச்சு பின்னால் வரப்போகும் நற்செய்திக்கு ஒரு அறிகுறியைப் போலிருக்கிறது.

### 4. இராக்.

மோசூலிலுள்ள எண்ணெய்க் கிணறுகளில், இராக்கியர் தண்ணீரைத்திருப்பிவிட்டு வெள்ளமாக்கி கெடுத்துவிட்டார்கள். சென்ற வெள்ளிக்கிழமையன்று, இராக்கிய விமானங்களுக்கும், பிரிட்டிஷ் விமானப்படைக்கும் ஹப்பானிய விமானச் சாலையின் மீது போர் நடந்தது. ஹப்பானியா என்பது பிரிட்டிஷ் விமானப்படையின் பயிற்சிக்கூடம். இங்கு பெரிதும் பயிற்சி விமானங்கள் தான் இருக்கின்றன. இந்த இடத்தைச் சுற்றி இராக்கிய அரசாங்கம் தன்னுடைய துருப்புகளை நிறுத்திவைத்துவிட்டது. இத்துருப்புகளைத் திருப்பியழைத்துக்கொள்ளும்படி பிரிட்டிஷார் இராக்கிய அரசாங்கத்தைக் கேட்டார்கள். ஆனால் இராக்கிய அரசாங்கத்தார் இன்னும் அதிகமான துருப்புகளை அனுப்பிவைத்தார்கள். மே மாதம் 2-ந் தேதி காலையில், இராக்கியத் துருப்புகளுக்கும், பிரிட்டிஷ் துருப்புகளுக்கும் போர் தொடங்கியது. இராக் பீரங்கிப்படை ஹப்பானிய விமானச்சாலையின் மீது குண்டுகளைப் பிரயோகித்தது. பிரிட்டிஷார் திருப்பிச் சுடும்படியாக நேர்ந்தது. நாள் முழுவதும் சண்டை நடந்தது.

இந்த சண்டைக்குமுன் நடந்த சில விஷயங்களைப் பற்றி விவரங்கள் இப்போது தெரிகின்றன. ரஷித் அலி, சட்ட வரம்புக்கு விரோதமாக, அரசாங்கத்தைக் கைப்பற்றிய உடனே, பிரிட்டிஷாரை எதிர்த்துப் போர் புரிவதற்காக ஜெர்மானியர்களை உதவிகேட்டாராம். பிறகு, பிரிட்டிஷ் துருப்புகள் இராக்கைவிட்டு வெளிச்செல்லவேண்டுமென்றும், புதிய பிரிட்டிஷ் துருப்புகள் இறங்குவதற்கு அனுமதிக்கமுடியாதென்றும், அவர் கூறினார். ஆனால் பிரிட்டிஷ் துருப்புகள், யாதொரு சம்பவமுமில்லாமல், பஸ்ராவுக்கு வந்து சேர்ந்தன. பிரிட்டிஷ் விமானச்சாலையை இராக் துருப்புகள் சூழ்ந்துகொண்டன. அப்போது தான் பிரிட்டிஷார் அவைகளைத் திருப்பியழைத்துக்கொள்ளும்படி கேட்டார்கள்.

இராக்கின் இளவரசருக்கு 'கார்டியனாக'விருந்த அமீர் அப்துல் இல்லா என்பவர், இராக்கியர்களுக்கு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அதில், ரஷித் அலிக்கு விரோதமாக இராக்கியர்கள் புரட்சிசெய்யவேண்டுமென்றும், கூடிய சீக்கிரம் தான் இராக்குக்குத் திரும்பிவந்து சட்டபூர்வமான அரசாங்கத்தை நிலை நிறுத்தப்போவதாகவும் கூறியிருக்கிறார்.

துருக்கி, பிரிட்டனுக்கும் இராக்குக்கும் நடக்கும் சண்டையில் மத்தியஸ்தம் செய்வதாகக் கூறியதென்றும், பிரிட்டன் அது தனக்கு இஷ்டமில்லை என்று பதில் கூறியதென்றும், தெரிகிறது.

இராக்கின் ஆகாய விமானப்படை பெரும்பாலும் பிரிட்டிஷாரால் அழிக்கப்பட்டது. ஹப்பானியப் பிரதேசத்தில், பிரிட்டிஷ் விமானங்கள் போர்புரிந்துகொண்டிருக்கின்றன. இராக்கியர்கள் அடிக்கடி குண்டு போட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் குறி சரியாக இல்லை. பஸ்ரா பிரதேசத்தில் எல்லாம் அமைதியாக இருக்கிறது.

எகிப்திய முதன் மந்திரி இராக்குக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார். இந்த நெருக்கடியான நிலைமையில், பிரிட்டனுக்கும், இராக்குக்கும் சண்டை நடக்கக்கூடாதென்றும், ஆகையால் சமாதானமான ஒரு ஏற்பாட்டுக்குச் சீக்கிரம் வந்துவிடவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

### 5. பால்கன்ஸ்.

யூகோஸ்லாவியாவின் கடல் விமானங்கள் அடங்கிய ஒரு படை ஜெர்மனியுடன் போராடிக்கொண்டிருக்கிறதென்றும், அமெரிக்காவின் உதவியைக் கொண்டு ஒரு ஆகாய விமானப்படையை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவென்றும், நூற்றுக்கணக்கான யூகோஸ்லாவிய ஆகாய விமான ஓட்டிகளும், ராணுவ உத்தியோகஸ்தர்களும் நாட்டைவிட்டுத் தப்பி வெளியே சென்றுவிட்டார்களென்றும் தெரிகிறது.

யூகோஸ்லாவிய அரசரைச் சேர்ந்த யூகோ அரசாங்கம் தம் நாட்டுக் கப்பல்களுக்கு கீழ்க்கண்ட அறிக்கையை விட்டிருக்கிறது :—"யூகோஸ்லாவியாவிலிருந்து வரும் உத்தரவுகளை, கப்பல்கள் கவனித்தல் கூடாது. வெளியிலிருக்கும் யூகோ கப்பல்களெல்லாம், பிரிட்டிஷ் அல்லது அமெரிக்க துறைமுகங்களுக்குப் போகும்படி, யூகோ அரசாங்கம் கட்டளையிடுகிறது."

யூகோவின் வடமேற்கு பாகத்தை இத்தாலி தன்னுடைய நாட்டில் சேர்த்துக்கொண்டதாக, இத்தாலியின் தலை நகராகிய ரோமிலிருந்து ஒரு அரசாங்க உத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது. இத்தாலியின் புதிய மாகாணத்திற்கு ஜுப்லான்ஜனு என்று பெயர்; முசலோனியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி அதற்கு அரசாங்கத் தலைவராயிருப்பார். 14 ஸ்லோவீன்க ளடங்கிய ஆலோசனைச் சபை ஒன்று அவருக்கு உதவியாயிருக்கும். யூகோஸ்லாவியாவின் மாகாணம், "இத்தாலிய ஏகாதிபத்தியத்"தில் சேர்க்கப்பட்டதாக அரசாங்க அறிக்கை கூறவில்லை; "இத்தாலிய அரசாட்சியில்" சேர்க்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. முசலோனியின் ஏகாதிபத்திய ஆசைதான் ஊமை கண்ட கனவாக முடிந்ததே; அதனால்தான் "ஏகாதிபத்தியம்" என்ற வார்த்தை இத்தாலியின் அகராதியில் இப்போது காணப்படுவதில்லை!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் கிரீசிலிருந்து வெளியேறியது முடிந்துவிட்டது. இது மிகவும் திறமையாகவும் சாமர்த்தியமாகவும் செய்யப்பட்டது. கிரீசில் பிரிட்டிஷ் தளகர்த்தராயிருந்த ஜெனரல் பிளேமியின் சாமர்த்தியத்தைப் பாராட்டி, ஆஸ்திரேலியாவின் ராணுவ மந்திரி, மிஸ்டர் ஸ்பெண்டர், மெல்போர்னில் பேசியிருக்கிறார். ஆதன்ஸில் துரோகிகளடங்கிய பொம்மை அரசாங்கத்தை ஹிட்லர் ஏற்படுத்தியதைக் குறித்து, கிரீட்டிலுள்ள பத்திரிகைகள் வன்மையாகக் கண்டித்து எழுதியிருக்கின்றன. இந்தப் பொய் அரசாங்கத்துக்கும், வீரத்தோடு போராடிய கிரேக்கர்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்றும், உண்மையான கிரேக்க தேசீய அரசாங்கம், கிரீட் தீவில், ஜார்ஜ் அரசருடைய தலைமையின் கீழிருக்கிறதென்றும், அந்த அரசாங்கம் கடைசிவரையில் ஹிட்லரோடு தொடர்ந்து போர் நடத்துமென்றும், கிரீட் பத்திரிகைகள் கூறுகின்றன.

சென்ற ஞாயிற்றுக்கிழமை (மேமீ 4வ) கிரீசைப் பற்றியும், பால்கன் யுத்தத்தைப்பற்றியும், ஹிட்லருடைய ரீச்ஸ்டாக் (ஜெர்மானிய பார்லிமெண்ட்) பேச்சில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பால்கன் பிரதேசத்தில், ஜெர்மனி தன் சுயநல அரசியல் எண்ணத்துடன் பிரவேசிக்கவில்லையென்றும், நாடுகளைக் கைப்பற்றுவது அதன் நோக்கமல்லவென்றும், பால்கன் நாடுகளுக்குள் நெருங்கிய பொருளாதார சம்பந்தம் ஏற்படுத்துவதுதான் அதன் லட்சியமென்றும் ஹிட்லர் பேச்சில் கூறப்பட்டிருக்கிறது. ஹிட்லர் பேச்சுக்கும், பால்கனில் நடந்த அட்டூழியங்களுக்கும் மலைபோன்ற வித்தியாசமிருப்பது சொல்லாமலே விளங்கும்!

### 6. கப்பல் நிலைமை.

வேண்டாம் என்று சொல்லுகிறவரைக்கும், பிரிட்டனுக்கு அமெரிக்கா கப்பல்களைக் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று மிஸ்டர் வெண்டல் வில்கி (பிரசிடெண்டு ஸ்தானத்திற்கு ரூஸ்வெல்டுக்கு எதிராக போராடியவர்) கூறுகிறார். எதிரிகள் நமது கப்பல்களை முழுகடித்துக்கொண்டு வருவது ஒரு நெருக்கடியான நிலைமையை உண்டாக்கியிருக்கிறதென்றும், அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்குச் செல்லும் உணவுப்பொருள்கள், யுத்த சாமான்கள் இவைகளைக் கொண்டுசெல்லும் கப்பல்களுக்குச் சரியான கப்பற் பாதுகாப்புதவி அளிக்கவேண்டுமென்றும், மிஸ்டர் வில்கி விளக்கமாகக் கூறினார்.

புரூக்லின் (நியூயார்க்) என்ற துறைமுகத்திலிருந்த யூகோஸ்லாவியாவின் இரண்டு கப்பல்கள், அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருக்கின்றன. இதில் ஒரு கப்பல் திருட்டுத்தனமாகத் தப்பியோட முயன்றது; முயற்சி பலிக்கவில்லை.

கிரீசினுடைய 'சப்மரீன்' கப்பல்கள் அலெக்சாண்டிரியாவுக்குப் போய் பிரிட்டிஷ் படைகளுடன் சேர்ந்துவிடும். 'டார்பிடோ போட்' என்று சொல்லும் வெடிகுண்டுக் கப்பல் 13-ல் இரண்டு அலெக்சாண்டிரியாவுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டன.

### 7. ஜப்பானும் சீனவும்.

ஜப்பானிய அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகா பர்லினுக்குச் சென்றபோது, ஹிட்லர் அவரிடம் அதிக கோபத்துடன் பேசினதாக சில விவரங்கள் ஒரு முக்கியமான பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. "நியூயார்க் ஹெரால்டு டிரிபியூனி"ன் டோக்கியோ நிருபர் கூறும் விவரமாவது: பிரிட்டனைத் தாக்குவதற்காக ஜெர்மனியோடு ஜப்பான் சேரவேண்டுமென்று, மிஸ்டர் மத்சூகாவை ஹிட்லர் கேட்டதாகவும், அதை ஜப்பானிய அயல் நாட்டு மந்திரி மறுத்ததாகவும், அதனால் ஹிட்லருக்கு அதிகமான கோபம் வந்து மேசையின் மீது தன் கையை ஓங்கிக் குத்தியதாகவும், அந்நிருபர் கூறுகிறார்.

ஜப்பானிய ஆகாய விமானங்கள் சென்ற வாரம், சுங்கிங் என்ற இடத்தை வெடி குண்டுகளால் தாக்கின. அந்தப் பட்டணத்தின் மேற்கிலுள்ள சிற்றூர்களில் 80 ஜப்பானிய விமானங்கள் வெடிகுண்டு மழை பொழிந்தன. விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் சீனர்கள் ஜப்பானிய விமானங்களைச் சுட்டார்கள். ஆனால் சீன விமானங்கள் ஜப்பானிய விமானங்களோடு போர்புரியவில்லை.

பூசோ என்ற இடத்தைக் கைப்பற்றிய ஜப்பானியர், அதை நிரந்தரமாக உபயோகிக்க நினைத்திருக்கிறார்கள். பூகியன் மாகாணத்தில் ஒரு பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்த நினைத்திருக்கிறார்களென்று தெரிகிறது.

### 8. விஷி.

சென்ற செவ்வாய்க்கிழமை, ருஷ்யாவின் பிரசிடெண்டு, காலினின், விஷி அரசாங்கத்தின் புதிய ருஷ்ய ஸ்தானீகரான, பர்ஜெரி என்பவரை மாஸ்கோவில் வரவேற்றார். அதற்கு முன் தினம், ஜெர்மனியின் ஸ்தானீகரான கவுண்ட் ஷூலன்பர்க்கை, பர்ஜெரி மரியாதை செலுத்துவது என்ற முறையில் போய்ப்பார்த்தார்.

அமெரிக்காவிலிருந்து 14,000 டன் மாவு பிரான்சு தேசத்துக்கு வந்திருக்கிறதென்றும், அதை இரண்டு கப்பல்கள், மார்சேல்சில் கொண்டுவந்திருக்கின்றனவென்றும், விஷி சமாச்சார ஸ்தாபனமொன்று கூறுகிறது.

விஷி அரசாங்கம் ஜெர்மனியுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. ஜெர்மன் ஆதிக்கத்தின்கீழ் வந்துள்ள பிரான்சுக்கும், பிரெஞ்சு ஆதிக்கத்திலுள்ள பிரான்சுக்கும் எல்லை வரையறையைத் திருத்தியமைப்பது என்பது ஒப்பந்தத்தில் கண்ட ஒரு விஷயம். ஜெர்மனிக்கு பிரான்சு தினந்தோறும் கொடுக்கும் 40 கோடி பிராங்குகள் (பிரெஞ்சு நாணயம்) 30 கோடிக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

யூகோஸ்லாவியாவின் வைதீக மாதாகோவிலின் தலைவராயிருந்த காவிரிலோ என்ற பாதிரியாரை, ஜெர்மன் அதிகாரிகள் கைது செய்திருக்கிறார்கள். ஒரு சாமியார் மடத்திலேதான் இப்படிக் கைது செய்தார்கள்.

குரோஷியா என்ற புதிய பால்கன் நாடு, இத்தாலியோடு நட்புரிமை கொண்டாட விரும்புகிறது என்று துரோகிகளின் தலைவராகிய ஆன்டி பாவிலீச் கூறியிருக்கிறார்.

### 10. நடுநிலைமை நாடுகள்.

ருஷ்ய சர்வாதிகாரியான ஸ்டாலின் ராணுவப் பள்ளிக்கூடங்களிலிருந்து தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு சென்ற வாரத்தில் ஒரு பிரசங்கம்செய்தார். அதில் ருஷ்ய பட்டாளத்தில் செய்யப்பட்ட பல ஆழ்ந்த மாறுதல்களைப்பற்றிக் கூறினார். தற்காலத்தில் நடக்கும் யுத்த முறைகளை அனுசரித்து பட்டாளங்கள் சீர்திருத்தப்பட்டு, புதிய முறையில் ஆயுத முஸ்தீபுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று ஸ்டாலின் குறிப்பிட்டார்.

ருஷ்ய அரசாங்கத்துக்கும், ஜெர்மனிக்கும் வியாபார சம்பந்தமாக, பலமான தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. இரண்டு நாடுகளுக்கும் ஏற்பட்ட வியாபார ஒப்பந்தத்தின்படி, ருஷ்யா அனுப்பவேண்டிய சாமான்களை அனுப்பவில்லை என்றும், அது சம்பந்தமாக ஒப்பந்தத்தின்படி சில காரியங்கள் செய்யும்படி ஜெர்மனி கேட்கிறதென்றும், ஜெர்மனி கேட்பதை ருஷ்யா மறுத்தால், இரண்டு நாடுகளுக்கும் சண்டை நேரிடும்

என்றும், லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் அங்காரா நிருபர் கூறுகிறுர்.


ருஷ்யாவுக்கும், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளுக்கும் சில வியாபார ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தங்களை ஜெர்மனி தன் சொந்த காரியத்துக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிறது—அதாவது தொழிற்சாலைக்கு உபயோகமான விளைபொருள்கள் தனக்கு அதிகமாகக் கிடைப்பதற்காக ஜெர்மனி முயற்சிக்கிறது. உதாரணமாக நார்வேயிலுள்ள தொழிற்சாலைகளில், ருஷ்யாவின் குரோம், மாங்கனீஸ் என்பவைகளைப் பதனிட்டுச் சுத்தப்படுத்துவதற்காக தருவிக்கப்படுகிறதாம்.

மேதினத்தன்று பவனிவந்த ருஷ்யத் துருப்புகள் எந்த இடத்திலும், எந்த விரோதியையும் தோற்கடிக்கும் பலமுடையது என்று "பிரவ்தா" என்ற ருஷ்யப் பத்திரிகை கூறுகிறது.

ருஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின், ருஷ்யாவின் முதன் மந்திரிப்பதவியை ஏற்றுக்கொண்டார். இதற்குமுன் முதன் மந்திரியாயிருந்த மாலதோவ், முதன் மந்திரிப்பதவியையும், அயல்நாட்டு மந்திரிப் பதவியையும் தானே பார்ப்பது கஷ்டமாயிருக்கிறதென்று கூறியபடியால், இந்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஸ்டாலின் ருஷ்யாவின் சர்வாதிகாரியாயிருந்தாலும், அவர் பொது உடைமைக் கட்சியின் பொதுக்காரியதரிசி பதவியைத்தான் வகித்திருந்தார். இப்போது முரண்பாடான ஒரு அரசியல் நிலைமை ஸ்டாலின் முதன் மந்திரியானதும் திருத்தப்பட்டிருக்கிறது.

---

**எச்.எம்.எஸ். 'ஆர்க் ராயல்' என்னும் பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்.**



இதை மூழ்கடித்ததாக விரோதிகள் அடிக்கடிப் பொய்ப் பிரசாரம் செய்துவந்தாலும், இது இன்னும் செவ்வனே கடலின்மீது உலவி வருகிறது. இது 22,000 டன் எடையுள்ளது. இதன் நீளம் 685 அடி. இதன் படைபலம் 1575. இதன் வேகம் 30·75 'நாட்டு'களாகும்.

---

# ஜிப்ரால்டர் மலையின் வலிமை.

## 236 வருஷங்களாகப் பாதுகாக்கப்பட்ட இடத்தை ஹிட்லரால் பிடிக்க முடியாது.

### மலைக்கோட்டையின் அமைப்பைப்பற்றிய விவரங்கள்.

ஜிப்ரால்டர் மலை, யுத்தச் செய்திகளில், இப்போது முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. ஹிட்லருக்கு ஜிப்ரால்டரின்மேல் கண்ணேட்டம் இருப்பதன் காரணம், பிரிட்டனின் கடற்படைப் பலத்தை உடைக்கவேண்டும் என்ற எண்ணந்தான். ஆனுல், அமெரிக்காவின் நிலையான யுத்த உதவியின் வளர்ச்சியும், பிரிட்டனின் ராணுவ பலத்தின் அதிகரிப்பும், ஹிட்லருடைய பேராசையை வீழ்த்திவிடும் என்பதில் சந்தேகமில்லை. அந்த வீழ்ச்சிக்குமுன், பிரிட்டனின் கடற்பலத்துக்குக் கெடுதலைச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன், எகிப்தை நோக்கியும், சூயஸ்கால்வாயை நோக்கியும், ஜெர்மன் படைகள் திருப்பப்பட்டிருக்கின்றன. ஆனுல், சோனும் என்ற இடத்தில் பிரிட்டிஷ் நைல்நதிப் படை அவைகளை முன்னேறவொட்டாமல் தடுத்துவிட்டன. அதே எண்ணத்துடன், ஜெர்மன் துருப்புகளை, ஸ்பெயின் மூலமாக ஜிப்ரால்டருக்குச் அனுப்புவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஹிட்லரின் பிரதிநிதியான ருடால்ப் ஹெஸ் என்பவர் ஸ்பெயினுக்குச் சென்று, அத்தேசத்தின் அயல்நாட்டு மந்திரியான சொரானே சூனர் என்பவரையும், இதர அமதவாதத் தேசீயத் தலைவர்களையும், பிரிட்டனுக்கு விரோதமாகத் தூண்டி, பண்டைக்கால ஸ்பெயினின் ஏகாதிபத்தியக் கதைகளைக் கூறி, ஆசைகாட்டி வருவதாகத் தெரிகிறது. ஆனுல், ஆப்பிரிக்காவிலும், மத்தியதரைக் கடலிலும் உள்ள பிரிட்டிஷ் யுத்தபலத்தைக் குறைப்பதற்கு, ஸ்பெயினின் சர்வாதிகாரியான ஜெனரல் பிராங்கோ உடன்படுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஏனென்றுல், இப்போது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஸ்பெயினுக்கு வேண்டிய உணவுச் சாமான்களும், மருந்து வகைகளும், இப்போது பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலி




Heliozinco., Survey Office, Madras. 1941.

Reg. No. 53/2 Copies 9700

ருந்தும் வருகின்றன; ஜெர்மனிக்கு ஸ்பெயின் உதவி செய்தால், அவைகள் வருவது நின்றுவிடும். சில காலத்திற்குமுன்பு, ஸ்பானிய மாணவர்கள், ஜிப்ரால்டர் ஸ்பெயினுக்குச் சேரவேண்டுமென்று கிளர்ச்சி செய்ததை, ஜெனரல் பிராங்கோ அடக்கிவிட்டதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எது எப்படியிருந்தாலும், பிரிட்டிஷ் அதிகாரிகள், ஜிப்ரால்டர் சம்பந்தமாக, எல்லாவித முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள். யுத்த விஷயங்களில் மிகுந்த திறமையும், அனுபவமும் பெற்ற வைகவுண்ட் கார்த் என்பவர் ஜிப்ரால்டரின் புதிய கவர்னராகவும், பிரதம தளகர்த்தராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்; ராணுவத்தில் சம்பந்தப்படாத சாதாரண மக்கள் ஜிப்ரால்டரை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்; ஜிப்ரால்டர் மலை எல்லாவித தாக்குதல்களுக்கும் தயாராயிருக்கிறது. சமீபத்தில் யுத்தக் கப்பல்களால் பாதுகாக்கப்பட்ட துருப்புகள் கொண்ட பல கப்பல்கள் ஜிப்ரால்டரில் வந்து சேர்ந்ததால், அங்குள்ள துருப்புகளின் பலம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதிக தூரம் குறிபார்த்துச் சுடும்படியான பழக்கம், ஜிப்ரால்டரின் வடக்கு பாகத்தில், அதிகமாகச் செய்யப்பட்டு வருகிறது.

### மலைக்குள் சுரங்கம்.

பழைய கவர்னர், சர் கிளைவ் விட்டல் என்பவர், ஜிப்ரால்டரின் பலத்தைப்பற்றி ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். மலைக்குள் அதிக தூரத்தில் குடைந்தெடுக்கப்பட்டு, அங்கு சுரங்கத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தன்னுடைய தலைமைக் காரியாலயத்திலிருந்து அவர் செய்த பிரசங்கம் கவனிக்கத்தக்கது. அவர் கூறியதாவது:—"ஹிட்லரும், ஹிட்லருடைய கொள்ளைக்காரர்களும், ஜிப்ரால்டருக்கு வந்து, அதன் ஜெயிக்க முடியாத தன்மையைக் கண்டு கொள்ளட்டும். ஸ்பெயின் தேசத்தை இந்த யுத்தத்தில் இழுத்துவிடுவதற்காக, ஜெர்மனி எவ்வளவோ முயற்சிகள் செய்துகொண்டு வருகிறது. ஆனால் ஸ்பெயின் தேசத்து மக்களில், 100-க்கு 90-பேர், யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால், தேசத் துரோகிகள் சிலர் இருக்கின்றார்கள். அதனால் தான், ஜிப்ரால்டரில் பிரம்மாண்டமான முன் ஜாக்கிரதை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகாயத்திலும், தரையிலும், கடலிலும் ஹிட்லரின் கொள்ளைக்கூட்டம் வந்து தாக்குமானால், அவைகளை நாம் நிர்மூலமாக்கி அழிப்போம். 1783-ம் வருஷம் ஜிப்ரால்டர் முற்றுகையிடப்பட்டது. அதற்குப்பின் ஜிப்ரால்டர் கோட்டைத் தளகர்த்தர், போர்புரியும் தலைமைக் காரியாலயத்தில் பிரவேசித்தது இது தான் முதல் தடவை".

1704-ம் வருஷம் ஜூலை மீ 24உ, ஜிப்ரால்டர் பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது. பலதடவை, ஸ்பெயின் எவ்வளவோ முயற்சி செய்தும், அதைப் பிடிக்க முடியவில்லை; முயற்சி செய்தபோதெல்லாம் தோல்வி அடைந்ததே ஒழிய வேறில்லை.

### கடல் வழிகளுக்குக் காவற்படி.

ஜிப்ரால்டர் சென்ற மகா யுத்தத்தில் ஒரு நிலக்கரிக் களஞ்சியமாக இருந்தது. இந்த யுத்தத்தில் அதனுடைய முக்கியம் மறுபடியும் தெரியவந்திருக்கிறது. மத்தியதரைக் கடலின் மேற்கு வாயிற்படியில் அது இருக்கிறது; ஆப்பிரிக்காவின் தெற்குக் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனைக்குப் போகும் வழியையும், இந்தியாவிற்குப் போகும் முக்கியமான கடல் வழியையும், ஜிப்ரால்டர் பாதுகாத்துக்கொண்டு இருக்கிறது. ஜிப்ரால்டர் மலையின் மீது தெற்கில், கடலிலிருந்து ஏறுவது மகா கஷ்டம். மேற்கில், செங்குத்தானதும், கரடுமுரடானதுமான மலை அமைந்திருக்கிறது. அங்கு உலகத்திலேயே மிகப் பலம் பொருந்திய கடற்படை பீரங்கிகள் காவல் புரிகின்றன. மலையைச் சுற்றிலும் இரண்டு மைல் நீளத்திற்கு சுரங்கம் போல் குடையப்பட்ட 'காலரி' கள் இருக்கின்றன. ஒவ்வொரு பனிரண்டு கஜத்திற்கும் ஒரு பீரங்கிமேடை இருக்கிறது. ஒவ்வொரு மேடையிலும் பல பீரங்கிகள் இருக்கின்றன. மலைக்கு அடிப்பிரதேசத்தில் பெரிய தண்ணீர்க்குளங்கள் இருக்கின்றன. மலை உச்சியிலிருந்து மழைத்தண்ணீர் அதிகமாகப் பிடித்து பின்னர் அக்குளங்களில் அத்தண்ணீர் பாய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு வருஷங்கள் தொடர்ந்து யுத்தம் நடந்தால் அதற்கு வேண்டிய உணவுப்பொருள்கள், தண்ணீர், வெடிகுண்டு சாமான் முதலியவைகள் ஏராளமாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டன் சென்ற 236 வருஷங்களாக ஜிப்ரால்டரைத் தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிறது. அதனுடைய பாதுகாப்பு இரண்டு நூற்றாண்டுகளாகச் செய்யப்பட்ட திறமையான பாதுகாப்பு. அதற்கு உதவியாக மத்தியதரைக்கடலில் பிரிட்டிஷ் கப்பற்படை கண்ணுறங்காமல் காவல் இருக்கிறது. ஜிப்ரால்டர் ஜாக்கிரதைக்கும் பாதுகாப்புக்கும் பேர்போன இடம். அதை நேர்முகமாகத் தாக்கிக் கைப்பற்றுவது ஹிட்லரால் செய்யமுடியாத காரியம். கரையோரக் கப்பற்சாலைகளையும் 'சப்ளை' ஸ்தலங்களையும் கப்பற் பழுதுபார்க்கும் இடங்களையும் ஜெர்மானியர் தாக்கலாம். ஆனால் கோட்டையைப் பிடிப்பது மிகவும் கஷ்டம். செண்டா என்ற இடத்திலிருந்தாவது அல்லது ஸ்பெயினில் வேறிடத்திலிருந்தாவது ஆகாய விமானத் தாக்குதல்களினால் ஜிப்ரால்டர் கடற்படை ஸ்தலமாக இருப்பதை ஒரு அளவுக்குக் கெடுக்கலாம். ஆனால் முடிவில் ஹிட்லரின் தோல்வி ஸ்பெயின் தீபகற்பத்தில்தான் ஏற்படும் என்று நினைக்கும்படியாய் தற்போதைய நிலைமை இருக்கிறது.

---

## "அமெரிக்கா போர்புரியத் தயாராயிருக்கிறது."

### பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் பேச்சு.

சென்ற யுத்தத்தில், அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவிசெய்ததற்குக் காரணமாயிருந்தவர், பிரசிடெண்டு உட்ரோ வில்சன் என்ற பெரியார். இந்த யுத்தத்தில், அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவிசெய்வதற்குக் காரணமாயிருப்பவர் பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் என்ற மகான். காலஞ்சென்ற மிஸ்டர் உட்ரோ வில்சன் பிறந்த இடத்தை ஒரு தேசியக் கோயிலாகக் கொள்ளவேண்டுமென்ற கொண்டாட்ட விழாவில், பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் பேசினார். அவர் கூறியதாவது:—"உலகத்தில் குடியரசு நிலைபெற்று நிற்கவேண்டுமென்பதற்காக அமெரிக்கர்கள் முன்பு போர்புரிந்திருக்கிறார்கள். இப்போதும் அதற்காகப் போர்புரியத் தயாராயிருக்கிறார்கள். மிஸ்டர் வில்சன் அவர்கள், குடியரசு தனிப்பட்டு வாழமுடியாது என்ற படிப்பினையை நமக்குப் போதித்திருக்கிறார். அவருடைய போதனையையும், அவருடைய நம்பிக்கையையும் நாம் பாராட்டுகிறோம். நமக்கு சுதந்தரத்திலும், குடியரசிலும் உண்மையான நம்பிக்கை உண்டு. இப்போது நடக்கும் வருந்தத்தக்க இந்த யுத்தத்தில், குடியரசுதான் முடிவில் வெற்றியுடன் வெளிவரும். உலக சரித்திரத்தில், வாழ்க்கையின் அருமைகளைப் பெருமையாகக் கொண்ட சமூகங்கள்தான் முன்னேற்றமடைந்து வந்திருக்கின்றன என்று தெரிகிறது. கத்தியால் கொல்வதில் நம்பிக்கை கொண்டவர்கள் முடிவில் கத்தியால் கொல்லப்பட்டு மாண்டார்களென்றும் தெரிகிறது."

இந்தக் கடைசி வாக்கியத்தை பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் கூறியபோது, கூட்டத்தினர் அதைப் பாராட்டிக் கைதட்டினார்கள். அமெரிக்கா, குடியரசு கொள்கையைப் பாதுகாப்பதற்காக, போர்புரிய எப்போதும் தயாராயிருக்கிறதென்று அவர் கூறியதும், கூட்டத்தினர் ஆரவாரம் செய்தார்கள்.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள்: பிரிட்டிஷ் ஸ்தானிகர் லார்டு ஹாலிபாக்ஸ் (முன்பு இந்தியாவில் வைஸ்ராயாயிருந்தவர்), லேடி ஹாலிபாக்ஸ், அமெரிக்க மந்திரி மிஸ்டர் கார்டல் ஹல், அவருடைய மனைவி, உட்ரோ வில்சனின் மனைவி.

# "போலந்து புத்துயிர் பெற்றெழும்"

## பிரிட்டிஷ் முதன்மந்திரியின் ஆண்டுவிழா பேச்சு.

போலந்தினுடைய சுதந்தரத்தின் 150-வது ஆண்டு விழா, மே மாதம் 3-ந் தேதி உலக முழுவதும் கொண்டாடப்பட்டது. ஆனல் சுதந்தர வாழ்வை இழந்து, ஹிட்லரின் அடிமை நாடாக இருக்கும் போலந்தில் அந்த நல்ல நாள் கொண்டாடப்பட வில்லை. இந்தக் கொண்டாட்ட நாளில், பிரிட்டிஷ் முதன் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அவர் பேசியதின் சுருக்க மாவது :—

"1791-ம் வருஷத்தில், போலந்தில், அரசியல் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனல் போலிஷ் தேசீயம் பலப்படுவதற்கு முன், பக்கத்திலுள்ள நாடுகள் போலந்தைப் பங்கு போட்டுக்கொண்டன. 1939-ம் ஆண்டில் இந்த துக்ககரமான கொடுமை மீண்டும் நடைபெற்றது. 20 வருஷங்களாகத் தழைத்துப் புஷ்பித்த போலிஷ் தேசீய உணர்ச்சியை, ஜெர்மானியர்கள் அழித்தார்கள். போலந்து தன்னுடைய தேசீய சுதந்தரத்தைக் காக்க ஒற்றுமையுடனும், உணர்ச்சியுடனும் போராடியது. உலகமெங்கும் போலந்தைப் பாராட்டிப் புகழ்கின்றுர்கள்.

"ஜெர்மானியர்கள் காட்டு மிராண்டிகளாயிருந்த காலத்தில், ஐரோப்பாவில் நாகரீகம் முதிர்ந்த நாட்டு மக்களை, ஹிட்லரும், நாஸிக் கொள்ளைக் கூட்டத்தினரும், அடக்கியாண்டு வருகிருர்கள். ஒவ்வொரு வாரமும், ஹிட்லரின் கொரூரத் துருப்புகள் பல நாடுகளில் மக்களைச் சுட்டுக் கொல்கின்றன. ஒரு நாள் ஹாலந்து தேசத்தினர் ; மற்றெருநாள் நார்வீஜியர்கள் ; இன்னெருநாள் பிரெஞ்சுக்காரர் ; பிறிதொருநாள் பெல்ஜியர்கள் அல்லது செக்கோஸ்லாவாக்கிய நாட்டு மக்கள். இப்போது சர்பியர்களும், கிரேக்கர்களும் ஹிட்லரின் கொடுங்கோன்மையின் கீழ் கஷ்டப்படுகின்றுர்கள். ஆனல் போலந்து நாட்டு மக்களுக்கு ஹிட்லர் செய்த அட்டூழியங்கள் வேறெங்கும் செய்யப்படவில்லை."

போலந்து மக்களுக்கு, மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—"நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையும், தைரியமும் கொடுக்கிறேம். போலந்தின் ஆத்மா என்றும் அழியாது ; அதை ஜெயிக்க யாராலும் முடியாது. இந்த யுத்தம் நீண்டதும், கடுமையானதுமாயிருக்கும். ஆனல் அது எப்படி முடியும் என்பது நிச்சயமாய்த் தெரிகிறது. நாம் எதிர் பார்ப்பதைவிட சீக்கிரத்தில் முடியலாம். பைத்தியக்காரர்களுடைய கொடுங்கோன்மை என்ற இரவு ஒழிந்து, சுதந்தரம், குடியரசு என்ற பேரொளியுடன் பொழுது புலரும். போலந்து மீண்டும் சுதந்தர நாடாகப் புத்துயிர் பெற்று எழுந்திருக்கும்."

போலந்தின் பிரசிடெண்டு ராக்கியே வீஸ் ரேடியோவில் பேசும்போது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும், அமெரிக்க குடியரசையும் புகழ்ந்து, போலந்தின் நன்றியறிதலையும் பாராட்டுதலையும், தெரிவித்தார். நியாயம் எந்தப்பக்கம் இருக்கிறதோ அந்தப்பக்கத்தில் அமெரிக்க பிரசிடெண்டு தன்நாட்டின் முழு பலத்தையும் கொடுத்து உதவிவருவதை மெச்சிப் பேசினர்.

# ஜெர்மன் தேசீயம் என்ற கொடும் பிசாசு.

## மிஸ்டர் மென்சீஸ் அவர்களின் பிரசங்கம்.

ஆஸ்திரேலியாவின் முதன் மந்திரி, மிஸ்டர் மென்சீஸ், ஒரு ரேடியோ பிரசங்கத்தில், பிரிட்டனின் தளரா ஊக்கத்தையும், பிரிட்டிஷ் மக்களின் தைரியத்தையும் பாராட்டிக்கூறியிருக்கிருர். அவர் பிரிட்டிஷ் பெண் மக்கள் செய்துவரும் அபாரமான வேலையை மிகவும் மெச்சியிருக்கிருர். பழைய காலத்து யுத்த ஒழுங்குகளைப் பகைவர்கள் கையாளுவதில்லை என்றும், ஹிட்லர் லட்சக்கணக்கான பிரிட்டிஷ் மக்களின் இருதயத்தில் துவேஷத்தையும், வெறுப்பையும் உண்டாக்கியது தவிர வேறில்லையென்றும் சொன்னர். ஆனல் ஹிட்லரை மாத்திரம் அழித்துவிட்டால் பிரயோசனமில்லை. ஹிட்லருக்குத் துணை செய்யும் ஜெர்மன் மக்களின் கேடுகெட்ட புத்தியையும் அடியோடு நீக்கவேண்டும். ஜெர்மன் தேசீயம் என்பது கொடுமையான பிசாசாக இப்போது இருந்து வருகிறது. அதை அழிப்பது நம்மவர்களின் கடமையாகும்.

# பிரிட்டனும் இராக்கும்.

## அரசியல் புரட்சியும், ரஷீதின் சூழ்ச்சியும்.

இராக் சுதந்தர நாடாக இருப்பதற்குக் காரணம் பிரிட்டன்தான். இப்போது இவ்விரு நாடுகளும் சிநேகத் தன்மையிழந்து, சண்டையிட்டுக்கொண்டிருப்பது வருந்தத்தக்கது. இராக் எண்ணெய்க் கிணறுகளுக்குப் பேர்போனது. இராக்கிலிருந்து மத்தியதரைக் கடலுக்குக் குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. மூன்று வருஷங்களுக்குமுன் 40 லட்சம் டன்களுக்குமேல் பெட்ரோல் எண்ணெய் கிடைத்தது. இராக்கிய சேனை 30,000 பேர் கொண்டது. இராக்கின் அரசர் 6-வயதுடைய இரண்டாவது பெய்சால் என்பவர். அவர் 1939-ம் ஆண்டில் பட்டத்துக்கு வந்தார். அவருடைய மாமனுகிய அமீர் அப்துல் இல்லா சென்ற ஒரு மாதம் வரைக்கும் 'ரீஜண்டாக' இருந்து, அரச குமாரர் சார்பாக அரசாங்கத்தை நடத்திவந்தார். ராணுவத்தில் சில நண்பர்களின் உதவியைக்கொண்டு, தேசீயத் தலைவரான சையத் ரஷீத் எல்ஜிலானி, அரசியற் புரட்சிசெய்து பலாத்கார முயற்சியினுல், தானே அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

பிரிட்டனுக்கும், இராக்குக்கும் ஒரு உடன்படிக்கை உண்டு. அது 1931-ம் ஆண்டு மீண்டும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. அதன்படி, இராக்கில் ஆகாய விமானத் தளங்களுக்காகப் பிரிட்டனுக்கு பஸ்ராவில் அல்லது அருகாமையில் இடங்கொடுக்கவேண்டும் ; இதல்லாமல், யூப்ரடீசுக்கு மேற்கில் ஒரு விமானத் தளத்துக்கு இடங்கொடுக்கவேண்டும். இதற்காக, அந்த உடன்படிக்கையின்படி, விமானத் தளங்களைப் பாதுகாக்க பிரிட்டிஷ் துருப்புகளை இராக்கில் வைத்திருக்கலாம். பிரிட்டிஷ் துருப்புகள், இராக்கில், ஓரிடத்திலிருந்து வேறெரு இடத்திற்குப் போவதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கவேண்டும். அதாவது, ரோட்டுகள், ரயில்வேக்கள், நீர் வழிகள், துறைமுகங்கள், ஆகாய விமானச்சாலைகள்—இவைகளையெல்லாம் உபயோகிப்பதற்கு, பிரிட்டிஷ் துருப்புகளுக்கு அதிகாரம் உண்டு.

இப்போதுள்ள அரசாங்கத் தலைவர், ரஷித் எல் ஜிலானி என்பவர், பிரிட்டிஷ் துருப்புகள் இராக்கில் இறங்குவதற்கு தன்னுடைய முழு சம்மதத்தையும் கொடுத்தார். பின்பு வேறு பிரிட்டிஷ் துருப்புகள் வந்தபோது, அவைகள் இருப்பதற்கு அனுமதி கொடுக்கமாட்டேனென்று மறுத்தார். முன்பு இருந்த படைகள் அந்த இடத்தைவிட்டுப் போனல் பின்னல் வரும் படைகளுக்கு இடம் கொடுக்க முடியும் என்று சொன்னர். நாஸிகளுடைய உத்தரவின்படி இவர் நடந்தாரென்றும், பிரிட்டனுக்கு விரோதமாகப் போர்புரிய ஜெர்மனியின் உதவியை நாடினரென்றும் பின்னல் தெரிந்தது. ரஷீத் சொன்னதை பிரிட்டிஷார் கேட்க மறுத்துவிட்டார்கள். நடந்த சண்டையில் இராக்கின் ஆகாயவிமானம் பாதிக்குமேல் அழிக்கப்பட்டது. முக்கியமான ராணுவ ஸ்தலங்களை எல்லாம் பிரிட்டிஷார் கைப்

பற்றியிருக்கிருர்கள். பாக்தாத் முதலிய இடங்கள் பிரிட்டிஷ் ஆகாயவிமானப்படையின் கவனத்தில் இருந்து வருகின்றன. எண்ணெய்க் களஞ்சியங்களின் நிலைமை அபாயகரமானது. எண்ணெய்க் களஞ்சியங்கள் ஜெர்மானியர் கையில் விழாமல் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன.

பிரிட்டனுடைய நோக்கம் என்ன என்பது விளக்கமாகத் தெரிகிறது. இராக்கைக் கைப்பற்றவேண்டுமென்ற எண்ணம் இத்தாலிக்குக் கிடையாது. இராக் சமாதானத்துடன் சுதந்தர வாழ்க்கையை அனுபவிக்கவேண்டுமென்பதுதான் பிரிட்டனின் நோக்கம், முஸ்லிம் நாடுகளைத் தாக்குவதுதான் பிரிட்டனின் நோக்கம் என்று ஜெர்மானியர்கள் பொய் பிரசாரம் செய்து வருகிருர்கள்.

சென்ற செவ்வாய்க்கிழமை, பிரிட்டிஷ் பார்லிமென்டில், யுத்த மந்திரி, மிஸ்டர் ஈடன், இராக்கைப்பற்றிப் பேசினுர். இராக்குக்கு சுதந்தரம் வாங்கிக் கொடுத்தது பிரிட்டன்தானென்றும், இந்தச் சண்டையைச் சமாதானம் செய்வதற்கு, எகிப்தும் துருக்கியும் முன் வந்திருக்கின்றனவென்றும், அந்நாடுகளுக்கு இராக் செய்த மோசம் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை என்றும் மிஸ்டர் ஈடன் கூறினுர்.

## கிரீஸ் சண்டையும், அதன் பலாபலன்களும்.

### பிரிட்டனின் வாக்குறுதியும் கிரீசின் வீரமும்.

கிரீசிலிருந்த, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் பின்னேறிய விஷயத்தைப்பற்றி உலகத்தின் பல பாகங்களில் மக்கள் பேசிக்கொள்ளுகிருர்கள். எதிரிகளுடைய பட்டாளங்கள் தங்களுடைய பலத்தைவிட அதிகப்படியாயிருந்தபடியால், கிரீசிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறின. அப்படி வெளியேறியது மேமீ 2உயோடு முடிவாய்விட்டது. 45,000 ஏகாதிபத்தியச் சிப்பாய்கள் ஜாக்கிரதையாக கிரீசை விட்டு விலகினுர்கள். இரண்டு நாசகாரிகளும் 3,000 பேர் கொல்லப்பட்டு அல்லது காயப்பட்டதும் தான் பிரிட்டனுக்கு மொத்த நஷ்டம்.

கிரேக்க அரசாங்கம், ஜெர்மனியை எதிர்த்துப் போராடுவது என்ற முடிவுக்கு வந்து, பிரிட்டனை உதவி கேட்டபோது, பிரிட்டன் போகாமலிருந்தால் அது பயங்காளித்தனமாகும். அந்த மாதிரி எண்ணமே பிரிட்டனுக்கு வரவில்லை. பிரிட்டன் பின் தங்கியிருந்தால், அது வெட்கப்படத்தக்க காரியமாயிருப்பதோடு, அடிமை வாழ்க்கையில் இருக்கும் ஐரோப்பிய மக்கள் பிரிட்டனிடம் வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்து விடுவார்கள். இன்னும் அதிகமான துருப்புகள் ஏன் அனுப்பப்படவில்லையென்ருல், எகிப்தையும், சூயஸ் கால்வாயையும் பாதுகாக்கவேண்டியிருந்த காரணத்தால் தான். ஏகாதிபத்தியத் துருப்புகளில் ஒரு சிறு பாகத்தை பிரிட்டன் இழந்தது ; ஆனுல் தான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றிற்று ; எதிரிகள் எகிப்தை தாக்குவது நின்றிருக்கிறது ; கிழக்கு மத்தியதரைக் கடலிலும், சூயஸிலும், பிரிட்டிஷ் ஆதிக்கம் அப்படியே யிருக்கிறது. ஒரு சிறு நாட்டின் துருப்புகள், ஒரு பெரிய எதிரியை எதிர்த்துப் போராடி தம் நாடாகிய கிரீசுக்குப் பெருமையும் புகழும் அதிகமாகப் பெற்றது ஒரு விசேஷமும்.

ஹிட்லருடைய நோக்கம் சண்டைபோடாமல் கிரீசைப் பிடித்துவிட வேண்டுமென்பது. அந்த நோக்கம் ஈடேறவில்லை. ஜெர்மனி போர்புரிய வேண்டியதாயிற்று. ஜெர்மன் துருப்புகளுக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டது ; யுத்த தளவாடங்கள் நஷ்டமாயின. நூற்றுக்கணக்கான ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 'சப்ளை' சாமான்கள், பெட்ரோல் எண்ணெய் அதிகமாக ஜெர்மனியால் உபயோகப்படுத்தப்பட்டது. போக்குவரத்து சாதனங்கள் சேதப்படுத்தப்பட்டன. கிரீசிலும், யூகோஸ்லாவியாவிலும், ஜெர்மனியை நாட்டுமக்கள் வெறுக்கிருர்கள் ; சில இடங்களில் சண்டைகளும் நடந்துகொண்டு வருகின்றன.

அபிசீனியாவையும், கிழக்காப்பிரிக்காவையும், இத்தாலி இழந்து விட்டது. வடக்காப்பிரிக்கா கடற்கரையோர நீள முழுவதும் ஜெர்மன் துருப்புகள் தங்கியிருக்கவேண்டியதாய் இருக்கிறது. ஈஜியன் கடலில் ஜெர்மனிக்கு விமானத் தங்குமிடங்கள் இருக்கின்றன. அடுத்ததாக, ஜெர்மனி துருக்கியைத் தாக்கவேண்டும் ; இல்லாவிட்டால் எகிப்தைத் தாக்கவேண்டும் ; அல்லது இரண்டையும் ஒரே காலத்தில் தாக்கவேண்டும். எப்படிச் செய்தாலும், ஜெர்மனியின் முயற்சிகள் தடுக்கப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கிரீசில் பிரிட்டனுடைய முயற்சிகள் பயன்படவில்லை. ஆனுல் பிரிட்டனுடைய நிலைமை அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. பிரிட்டனின் பலத்துககு ஜீவ நாடியாக உள்ளது அட்லாண்டிக் சமுத்திரம். அதில் மத்தியதரைக் கடல் நிகழ்ச்சிகளின் பலாபலன்கள் ஒன்றும் தெரியவில்லை.

## ஆப்பிரிக்காவில் யுத்தப்போக்கு.

### அபிசீனியாவில் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு வெற்றிமாலை வீர அரசர்.

இத்தாலி அட்டிஸ் அபாபாவைப் பிடித்துச் சரியாக ஐந்து வருஷங்களுக்குப்பிறகு அபிசீனியச் சக்ரவர்த்தி, ஹெயிலி செலாசி தன்னுடைய தலைநகரில் வெற்றி மாலையுடன் பிரவேசித்தார். லெப்டினண்ட் ஜெனரல் கன்னிங்காம் என்ற பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்கா தளகர்த்தர் அவரை வரவேற்ருர். அபிசீனியாவைக் கைப்பற்றியதிலும், பொதுவாக ஆப்பிரிக்காவில் நடந்த யுத்தத்திலும், இந்தியச் சிப்பாய்கள் என்றும் அழியாத வீரப்புகழைப்பெற்ருர்கள்.

சிம்லாவிலிருந்து அரசாங்கத்தாரால் விடுக்கப்பட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில், இந்தியத் துருப்புகள் அபிசீனியாவில் செய்த மகத்தான வேலை புகழப்பட்டிருக்கிறது. அதில் இந்தியத் துருப்புகள் எப்படி முன்னேறிக்கொண்டு வருகின்றன என்பதைப்பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன.

அபிசீனியா கைப்பற்றப்பட்டதால், தென்னுப்பிரிக்காவின் துருப்புகள், எகிப்திலும், லிபியாவிலும் சண்டை செய்வதற்கு சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. எகிப்தியச்சண்டை இனிமேல் பின்னும் மும்முரமாக நடைபெறும். பிரிட்டிஷ் நைல்நதிப் பட்டாளத்திற்குத் துணையாக அபிசீனியாவில் போர்செய்த துருப்புகள் வந்துகொண்டேயிருக்கின்றன. கிரீசிலிருந்து விலகிய 45,000 துருப்புகளும் இவைகளுடன் சேர்ந்தன. யுத்த சாமான்கள் முதலியன அடங்கிய 26 அமெரிக்கக் கப்பல்கள் சூயஸ் கால்வாயில் வந்து சேர்ந்திருக்கின்றன. இனிமேலும், அமெரிக்காவிலிருந்து உதவி வந்துகொண்டே இருக்கும். இந்த நிலைமையில், எகிப்திய சண்டையில், ஜெனரல் வேவல் என்ற பிரபல வெற்றி வீரருக்கு எதிராகப் போர்புரியும் ஜெர்மனியின் தளகர்த்தருடைய கஷ்டமான வேலையைப்பற்றி விவரமாகச்சொல்ல வேண்டியதில்லை.

## தூரக்கிழக்கு அரங்கம் : ஜப்பானின் தந்திரம்.

### கிழக்கிந்திய தீவுகள்மேல் கண் : ஆஸ்திரேலியாவின் எச்சரிக்கை.

ஜப்பானின் அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகா ஜெர்மன் முறைகளைப் பாராட்டுகிறார். ஜப்பான், ஜெர்மன் முறைகள் பலவற்றைக் கையாண்டு கொண்டு வருகிறது. ஐரோப்பாவில் புதிய வாழ்க்கைத் திட்டத்தை ஹிட்லர் ஏற்படுத்த முயற்சிப்பது போல், கிழக்கில் ஜப்பான் முயன்று வருகிறது. ஹிட்லருடைய பயமுறுத்தல் தந்திரத்தையும், ஜப்பான் பின்பற்றி வருகிறது. தாய்லாந்து ஜப்பானுடைய ஆதிக்கத்தில் இப்போது இருக்கிறது. பிரெஞ்சு இண்டோ சீனாவின்மேல் ஜப்பான் கண்ணோக்கம் வைத்திருக்கிறது. அதையும் தன் அடிமை நாடாக்க முயற்சிக்கிறது. தெற்கு நோக்கி ஜப்பான் செல்லும் நோக்கம் நெதர்லாந்தின் கிழக்கிந்திய தீவுகளைப் பிடிப்பதுதான். அங்குள்ள ரப்பர், எண்ணெய், தேயிலை, வாசனைத் திரவியங்கள் ஜப்பானுக்கு வேண்டியதாயிருக்கிறது. ஜாவா, சுமத்ரா, முதலிய இரண்டு பெருந்தீவுகள், போர்னியோ, செலிபீஸ், பாபுவா, மொலுகாஸ், இன்னும் பல சிறு தீவுகள்—இவைகளெல்லாவற்றிற்கும் நெதர்லாந்தின் கிழக்கிந்திய தீவுகள் என்று பெயர்.

போர்னியோவில் மூன்றில் ஒருபாகம் பிரிட்டனைச் சேர்ந்தது. கிழக்கிந்திய தீவுகளுக்கு வடக்கில் அமெரிக்காவின் ஆதிக்கத்திலுள்ள பிலிப்பைன் தீவுகள் இருக்கின்றன. கிழக்கிந்திய தீவுகளின் மொத்த ஜனத்தொகை 7 கோடி. ஜாவாதான் மிகுந்த ஜனத்தொகையுடையது. இந்தத் தீவுகளில் 75 லட்சம் மெட்ரிக்டன் எடையுள்ள சுத்திகரிக்கப்படாத எண்ணெய் (' குரூட் ஆயில் ') ஒரு வருஷத்தில் கிடைக்கிறது. கரும்புச் சர்க்கரைக்குப் பேர் போனது ஜாவா. தேயிலை, பனை எண்ணெய், புகையிலை, கொய்னா, வாசனைத் திரவியங்கள், இவைகளும் வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அலுமினியத்துக்கு வேண்டிய 'பாக்சைட்' உப்பு இங்கே அகப்படுகிறது.

இந்தத் தீவுகள் யுத்த அரங்கத்தில் முக்கியமானவை ; தூரக்கிழக்குப் பிரதேசத்தையும், தெற்கு ஆசியா கண்டத்தையும் சேர்க்கும் சங்கிலித் தொடர்களாக இருக்கின்றன. இந்தியா, பாரசீகக் கடல் மூலமாக மத்திய ஐரோப்பா, செங்கடல், ஐரோப்பா முழுமையும், இந்தத் தொடர்ச்சியில் சேருகின்றன. சைபீரியன் ரயில் பாதையும், பர்மா ரோடும் இருந்த போதிலும், கடல் வழிதான் பொருளாதார சௌகரிய வழியாக இருக்கிறது. அந்த வழிக்கு, கிழக்கிந்திய தீவுகள் முக்கியமாய் இருக்கின்றன.

கிழக்கிந்திய தீவுகளுக்கும், இந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்தியக் கலை, நாகரீகம், வழக்கம், புராணம், சித்திரம் முதலியன ஜாவாவைத் தங்குமிடமாகக் கொண்டிருக்கின்றன. ஜாவாவிலிருந்து சில வருஷங்களுக்கு முன் 10 லட்சம் டன் சர்க்கரை இந்தியாவில் இறக்குமதியாயிருந்தது. கிழக்கிந்திய தீவுகளுக்கு எஃகு, பஞ்சு, துணிகள் முதலியன இந்தியா ஏற்றுமதி செய்யக்கூடும். இதனால்தான் கிழக் கிந்திய தீவுகளை ஜப்பான் கைப்பற்ற விரும்புகிறது.

ஆனால் ஜப்பானிய எண்ணங்களுக்குத் தடையாக, பிரிட்டனும், அமெரிக்காவும் இருக்கின்றன. சிங்கப்பூர் கடற்படை ஸ்தலம் பலப்படுத்தப்பட்டு இருக்கிறது. விமானப் படைகள் காடுகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியத் துருப்புகள், இங்கிலீஷ் துருப்புகள், ஸ்காட்டிஷ் துருப்புகள், இவைகளெல்லாம் சிங்கப்பூரில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. கிழக்கிந்தியத் தீவுகளில் ஜப்பானுடைய எண்ணம் ஒன்றும் நிறைவேறுவதற்கு இடமில்லை. சந்தேகப்படும்படியான செய்கை ஏதாவது ஜப்பான் செய்யுமானால், ஆஸ்திரேலியா சும்மா இருக்காதென்று எச்சரிக்கை செய்திருக்கிறது.

---

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

---

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.